RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 227 | ஆகஸ்டு.19 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## பாமக தலைவராக ராமதாஸ் தொடர்ந்து செயல்படுவார்; அன்புமணி மீது 16 குற்றச்சாட்டுகள்: சிறப்பு பொதுக்குழுவில் நடந்தது என்ன?

விழுப்புரம், ஆக.19-
பாமக தலைவராக ராமதாஸ் செயல்படுவார் என சிறப்பு பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், அன்புமணி மீது 16 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. பாமக சிறப்பு பொதுக் குழுக் கூட்டம் புதுச்சேரி அடுத்த பட்டானூரில் நேற்று நடைபெற்றது. நிறுவனர் ராமதாஸ் தலைமை வகித்தார்.

பொதுச் செயலாளர் முரளிசங்கர், மாநில அமைப்புச் செயலாளர் அன்பழகன், சேலம் மேற்கு எம்எல்ஏ அருள் உட்பட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். மேடையில் ராமதாஸுக்கு அருகிலேயே, அவரது மகள் ஸ்ரீகாந்தி அமர்ந்திருந்தார். கவுரவத் தலைவர் ஜி.கே. மணி தீர்மானங்களை வாசித்தார்.

அங்கீகாரத்தை இழந்த பாமகவை மீண்டும் பலப்படுத்த கட்சியின் அமைப்பு விதி 13ல் திருத்தம் செய்து, பாமக தலைவராக ராமதாஸ் தொடர்ந்து செயல்படுவார் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, நிர்வாகிகள், தொண்டர்கள் பலத்த ஆரவாரம் செய்தனர். மேலும், சட்டப்பேரவைத் தேர்தலில் கூட்டணி அமைக்கும் முழு அதிகாரம் ராமதாஸுக்கு வழங்கப்பட்டது.

கல்வி, வேலைவாய்ப்புகளில் வன்னியர்களுக்கு 10.5 சதவீத உள் இடஒதுக்கீடு, சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு, தமிழகத்தில் பூரண மதுவிலக்கு, அனைத்து ஆறுகளிலும் 5 கி.மீ. தொலைவுக்கு ஒரு தடுப்பணை, காவிரி உபரிநீர் திட்டம், காவிரிகோதாவரி திட்டம், தமிழை கட்டாயப் பாடமாக்குவது, பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவது, பெரிய மாவட்டங்களைப் பிரிப்பது, நந்தன் கால்வாய் திட்டம்,

ஆசிரியர் காலி பணியிடங்களை நிரப்புவது, சுங்கச்சாவடி கட்டணத்தைக் குறைப்பது, தமிழகத்துக்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 36 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தொடர்ந்து, 8 பேர் கொண்ட ஒழுங்கு நடவடிக்கை குழு தயாரித்த அறிக்கையை ஜி.கே.மணி வாசித்தார்.

அதில், சிறப்பு புத்தாண்டு பொதுக்குழுவில் மைக்கை தூக்கி வீசியது, பனையூரில் புதிய அலுவலகம் தொடங்கியது, தலைமைக்கு கட்டுப்படாமல் கட்சியை பிளவுப்படுத்தும் செயலில் ஈடுபட்டது, சமூக ஊடகங்களில் ராமதாஸ் உள்ளிட்டவர்களை அவதூறாக விமர்சிப்பது, தைலாபுரம் இல்லத்தில் ஒட்டுக்கேட்பு கருவி வைத்தது, அனுமதியின்றி பொதுக்குழு கூட்டத்தை நடத்தியது, ராமதாஸை சந்திக்க வருபவர்களை தடுத்து நிறுத்தியது.

பசுமை தாயகம் அமைப்பை கைப்பற்றியது, தலைமை அலுவலகத்தை இடமாற்றம் செய்தது. 40 தடவை ராமதாஸிடம் பேசியதாக பொதுவெளியில் பொய் பேசியது என அன்புமணி மீது 16 வகையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்க ராமதாஸுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. கூட்டத்தில் நிறுவனர் ராமதாஸ் பேசும்போது, “கட்சியினர் மற்றும் மக்கள் விரும்பும் கூட்டணியை அமைப்பேன். 10.5 சதவீத உள் இடஒதுக்கீட்டுக்காக தொடர்ந்து போராடுவோம்” என்றார்.

## ‘102’ சேவை மூலம் 2 லட்சம் தாய்மார்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனை: சுகாதாரத்துறை தகவல்

சென்னை, ஆக.19-
‘102’ சேவை மூலம் 2 லட்சத்திற்கு மேற்பட்ட தாய்மார்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. ஆரம்ப கால குழந்தைப் பருவ வளர்ச்சி என்பது குழந்தை நலனில் ஒரு முக்கிய அங்கமாகும். இது கருவுறுதல் முதல் குழந்தை பிறப்பு வரையுள்ள பகுதி, சிறுகுழந்தை பருவம் (01 வயது) மற்றும் ஆரம்ப கால குழந்தை பருவம் (16 வயது) என தனித்துவமான கட்டங்களை உள்ளடக்கியதாகும்.




ஆரம்பகால குழந்தைப் பருவத்தில் அறிவாற்றல், பேச்சு, செயல், சமூக மற்றும் உணர்வுத்திறன் வளர்ச்சி ஆகியவை மிக முக்கிய பங்காற்றுகின்றன. இதன் அதிக முக்கிய தாக்கத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு ஆரம்ப கால குழந்தைப் பருவ வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து டிஜிட்டல் தொழில் நுட்பம் முறை மூலம் கண்காணிப்பு, தனிநபருக்குரிய தகவல் அளிப்பு மற்றும் வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்துதல் போன்ற வழிமுறைகள் மூலம் ஆரம்பகால குழந்தை பருவ வளர்ச்சியியை மேம்படுத்திவருகிறது. குறிப்பாக 5 இருக்கைகள் கொண்ட 102 என்ற ஆரம்ப கால குழந்தை பருவ வளர்ச்சி கண்காணிப்பு தொலைபேசி மையத்தை அமைத்து தொடர்ந்து கர்ப்பிணிகள், பின்பேறுகால தாய்மார்கள் மற்றும் 2 வயது வரையுள்ள குழந்தைகளின் தாய்மார்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதலை வழங்கி வருகிறது.

இம்மையத்தின் மூலம் கர்ப்பக்கால பராமரிப்பு, ஆரம்ப கால குழந்தை பருவ வளர்ச்சி, தடுப்பூசி வழங்கல், கர்ப்பக்காலத்தில் உள்ள காரணிகள், குழந்தைகள் கண்காணிப்பு, ஆரோக்கியமான குழந்தை வளர்ப்பு முறைகள் போன்றவை குறித்த தேவையான தகவல்கள், நினைவில் கொள்ள வேண்டிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. மேலும் சிறப்பு பச்சிளங்குழந்தைகள் பராமரிப்புப் பிரிவிலிருந்து விடுவிக்கப்பட்ட குழந்தைகளின் பட்டியல் விவரங்கள் இத்தொலைபேசி மையங்களுக்கு அளிக்கப்பட்டு அக்குழந்தைகளின் தாய்மார்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு குழந்தையின் சரியான உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி மற்றும் குழந்தை நலமுடன் இருக்கும் நிலையை உறுதிப்படுத்துகின்றனர். ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை 2,14,580 தாய்மார்கள் இந்த ஆரம்ப கால குழந்தை பருவ வளர்ச்சி கண்காணிப்பு தொலைபேசி மையங்கள் மூலம் தொடர்பு கொள்ளப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்படுள்ளன.

# 4 ஆண்டுகளில் நிறைவேற்றாததை 7 மாதத்தில் நிறைவேற்றுவார்களா?

## திமுக மீது இபிஎஸ் விமர்சனம்

திருவண்ணாமலை: ஆக.19-
திட்டங்களுக்கு பெயர் வைத்துக்கொள்வதில் முதல்வர் ஸ்டாலினுக்கு இணையில்லை. 4 ஆண்டுகளாக நிறைவேற்றாத திட்டங்களை, 7 மாதங்களில் நிறைவேற்றப் போகிறார்களா என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார். ‘மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்’ என்ற பிரச்சாரப் பயணத்தை மேற்கொண்டுள்ள பழனிசாமி, திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர் சட்டப் பேரவைத் தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.



திருவண்ணாமலை அண்ணா சிலை அருகே நேற்று முன்தினம் இரவு பொதுமக்களிடையே பழனிசாமி பேசியதாவது: திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலை தொல்லியல் துறை கைப்பற்ற முயன்றபோது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா உச்ச நீதிமன்றம் வரை சென்று, கோயிலை மீட்டெடுத்தார்.

இந்தியாவிலேயே கடன் வாங்குவதில்தான் சூப்பர் முதல்வராக இருக்கிறார் மு.க.ஸ்டாலின். ஏறத்தாழ ரூ.5.38 லட்சம் கோடி கடன் வைத்துள்ளனர். அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான பழைய ஓய்வூதியத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று திமுக தேர்தல் வாக்குறுதி அளித்தது. இதுவரை அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

தற்போது ‘உங்களுடன் ஸ்டாலின்’ என்று ஒரு திட்டம் தொடங்கியிருக்கிறார். பெயர் வைப்பதில் ஸ்டாலினுக்கு இணையாருமில்லை. 46 பிரச்சினைகள் பொதுமக்களுக்கு இருப்பதாக 4 ஆண்டுகள் கழித்து கூறுகின்றனர். அவற்றை 45 நாட்களில் தீர்த்து வைப்பார்களாம். 4 ஆண்டுகளாக நிறைவேற்ற முடியாததை 7 மாதத்தில் நிறைவேற்ற முடியுமா? மக்களிடம் ஆசையைத் தூண்டி, வாக்குகளைப் பெறவே இந்தத் திட்டத்தைக் கையில் எடுத்துள்ளனர்.

அதிமுக அரசு சிறந்த நிர்வாகத்துக்காக பல விருதுகளைப் பெற்றது. அண்ணாமலையார் கோயில் குடமுழுக்கு அதிமுக ஆட்சியில் சிறப்பாக நடந்தது, கிரிவலப்பாதையை ரூ.64 கோடியில் மேம்படுத்தினோம், யாத்திரி நிவாஸ், புறவழிச்சாலை, தடுப்பணைகள், 3 அம்மா மருந்தகம், தாலிக்குத் தங்கம் என மக்களுக்கான பல்வேறு திட்டங்கள், பணிகளை செயல்படுத்தினோம். அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட ரயில்வே மேம்பாலத்தை ஸ்டிக்கர் ஒட்டி திறந்திருக்கிறார்கள். இவ்வாறு பழனிசாமி பேசினார்.

நிகழ்ச்சியில், அதிமுக கிழக்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ். ராமச்சந்திரன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் பி.சுனில்குமார், மாவட்ட எம்ஜிஆர் இளைஞரணிச் செயலாளர் டிஸ்கோ. எஸ்.குணசேகரன், நகரச் செயலாளர் ஜே.எஸ். செல்வம், ஒன்றியச் செயலாளர் கலியபெருமாள், மாமன்ற உறுப்பினர் எஸ்.நரேஷ், முன்னாள் மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் பி.என்.குமரன், ஆணாய் பிறந்தான் முன்னாள் ஊராட்சித் தலைவர் கே.தருமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சங்கரன்கோவில் நகராட்சித் தலைவர் தேர்தல்: திமுகவை சேர்ந்த கவுசல்யா வெற்றி

தென்காசி: ஆக.19-
சங்கரன்கோவில் நகராட்சி தலைவர் தேர்தலில் திமுகவை சேர்ந்த கவுசல்யா வெற்றி பெற்றுள்ளார்.

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் நகராட்சியில் 30 வார்டுகள் உள்ளன. கடந்த உள்ளாட்சி தேர்தலில் அதிமுக 12 வார்டுகளிலும், திமுக 9 வார்டுகளிலும், மதிமுக 2 வார்டுகளிலும், காங்கிரஸ், எஸ்டிபிஐ தலா ஒரு வார்டிலும், சுயேச்சைகள் 5 வார்டுகளிலும் வெற்றி பெற்றனர். நகராட்சி தலைவர் பதவிக்கு திமுகவை சேர்ந்த உமா மகேஸ்வரி, அதிமுகவை சேர்ந்த முத்துலெட்சுமி ஆகியோர் போட்டியிட்டனர். இதில், இருவரும் தலா 15 வாக்குகள் பெற்றதால் சமநிலை ஏற்பட்டது. இதையடுத்து, குலுக்கல் முறையில் நகராட்சி தலைவராக உமா மகேஸ்வரி தேர்வு செய்யப்பட்டார்.



இந்நிலையில், அதிமுக, திமுக கவுன்சிலர்கள் உட்பட 24 கவுன்சிலர்கள் நகராட்சி தலைவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறி நம்பிக்கையில்லா தீர்மானம் கோரி நகராட்சி ஆணையரிடம் மனு அளித்தனர். அதன்படி, கடந்த ஜூன் மாதம் 2ம் தேதி நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான குரல் வாக்கெடுப்பு நடைபெற்றது.

மொத்தம் உள்ள 30 உறுப்பினர்களில் தீர்மானத்துக்கு ஆதரவாக 28 கவுன்சிலர்கள் வாக்களித்தனர். நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றி பெற்றதால் நகராட்சி தலைவர் பதவியை உமா மகேஸ்வரி இழந்ததாக அறிவிக்கப்பட்டு, நகராட்சி தலைவர் அலுவலகம் பூட்டி சீல் வைக்கப்பட்டது.

பின்னர், குரல் வாக்கெடுப்பு நடத்தியது செல்லாது என அறிவிக்கக் கோரி உயர் நீதிமன்ற மதுரை கிளையில் உமா மகேஸ்வரி மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், தீர்மானம் மீது ஜூலை 17ம் தேதி மறைமுக வாக்கெடுப்பு நடத்தவும், அதன் முடிவுகளை ஜூலை 18ம் தேதி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் உத்தரவிட்டது.

அதன்படி, ஜூலை 18ம் தேதி நம்பிக்கையில்லா தீர்மானம் மீது மறைமுக வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் தீர்மானத்துக்கு ஆதரவாக 28 கவுன்சிலர்கள் வாக்களித்தனர். இதைத் தொடர்ந்து உமா மகேஸ்வரி நகராட்சி தலைவர் பதவியை இழந்தார்.

இந்நிலையில், நகராட்சியில் காலியாக உள்ள தலைவர் பதவிக்கு இன்று தேர்தல் நடைபெற்றது. இதையொட்டி நகராட்சி அலுவலக வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. திமுக சார்பில் 6வது வார்டு உறுப்பினர் கவுசல்யா, அதிமுக சார்பில் 26 வது வார்டு உறுப்பினர் அண்ணாமலை புஷ்பம் ஆகியோர் போட்டியிட்டனர். முன்னாள் நகராட்சி தலைவர் உமா மகேஸ்வரி மற்றும் திமுக உறுப்பினர் ஒருவர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. மீதமுள்ள 28 பேர் வாக்களித்தனர்.

நகராட்சி ஆணையாளர் சாம் கிங்ஸ்டன் முன்னிலையில் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் முடிந்ததும் வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவு அறிவிக்கப்பட்டது. இதில் திமுகவை சேர்ந்த கவுசல்யா 22 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அதிமுகவை சேர்ந்த அண்ணாமலை புஷ்பம் 6 வாக்குகள் மட்டும் பெற்றார்.

## சீர்திருத்த நடவடிக்கைகளால் நாட்டின் ராணுவ தளவாட உற்பத்தி ரூ.1.5 லட்சம் கோடியாக உயர்வு

புதுடெல்லி, ஆக.19-
கொள்கை சீர்திருத்தம், தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல், அன்னிய நேரடி முதலீட்டை தாராளமயமாக்கியது ஆகியவற்றால் நாட்டின் ராணுவ தளவாட உற்பத்தி ரூ.1.5 லட்சம் கோடியை எட்டி சாதனை படைத்துள்ளது.

நாட்டின் ராணுவ தளவாட உற்பத்தி 2024 25ம் ஆண்டில் ரூ.1,50,590 கோடியாக உயர்ந்து புதிய சாதனை படைத்துள்ளது. இது இதற்கு முந்தைய ஆண்டின் உற்பத்தியை விட 18 சதவீதம் உயர்வு. கடந்த 201920ம் ஆண்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 90 சதவீதம் உயர்வு.

இந்த சாதனை குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியதாவது: ராணுவத் தளவாட உற்பத்தி ரூ.1.5 லட்சம் கோடியை எட்டியதற்கு




ராணுவத் தளவாட துறை மற்றும் தொழிற் துறையினரின் பங்களிப்பே காரணம். இந்த வளர்ச்சி, உள்நாட்டு ராணுவ தளவாட உற்பத்தியின் பலத்தை காட்டுவதாகவும், இறக்குமதி குறைந்து ராணுவத் தளவாட ஏற்றுமதியை அதிகரிக்கும் அளவுக்கு நாட்டை கொண்டு சென்றுள்ளது.

ஒரு நாடு தனது பாதுகாப்பு தேவையில் தன்னிறைவு பெறவில்லை என்றால், அதன் சுதந்திரம் முழுமையடையாது. நாம் ஆயுதங்களை வாங்கினால், நாம் பிற நாடுகளின் தயவில் இருக்க வேண்டிய நிலை ஏற்படும். அதனால்தான், தற்சார்பை அடைய மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது. தற்போது ராணுவத் தளவாடத் துறை விரிவடைந்துள்ளது, நாட்டுக்கு இதுவரை இல்லாத பலத்தை அளித்துள்ளது. இவ்வாறு அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறினார்.

அதிகரிப்பு மிக முக்கியம்: நாட்டின் ராணுவத் தளவாட உற்பத்தி அதிகரிப்பு , பதற்றமான நேரங்களில் வெளிநாட்டு நிறுவனங்களை சார்ந்திருப்பதை குறைக்கும். மிக முக்கியமான ராணுவத் தளவாடங்கள் எல்லாம் விரைவில் விநியோகம் செய்யப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. ராணுவத் தளவாட உற்பத்தி அதிகரிப்புக்கு மத்திய அரசு மேற்கொண்ட கொள்கை சீர்திருத்தம், தனியார் துறையை ஒருங்கிணைத்தது, அன்னிய நேரடி முதலீட்டை தாராளமயமாக்கியது ஆகியவையே காரணம்.

தற்சார்பு இந்தியா திட்டம் கடந்த 2020ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தால் ராணுவ தளவாட கொள்முதல் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டன. முப்படைகளுக்கான சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் மேம்படுத்தப்பட்டன. ராணுவத் தளவாட உற்பத்தியில் புதுமை கண்டுபிடிப்பு திட்டம் (ஐடெக்ஸ்) திட்டம் கடந்த 2021ம் ஆண்டு கொண்டு ரூ.499 கோடி மதிப்பில் கொண்டு வரப்பட்டது.

இத்திட்டம், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களக்கு தேவையான ஆதரவை அளித்தது. இதன் மூலம் ராணுவத் தொழில் நுட்பத்தில் புதுமை கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டன. இத்திட்டம் 300க்கும் மேற்பட்ட புதுமை கண்டு பிடிப்பாளர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு தேவையான ஆதரவை அளிக்கிறது.

38,000க்கும் மேற்பட்ட இறக்குமதி பொருட்கள் உள்நாட்டில் தயாரிப்பதற்கு அடையாளம் காணப்பட்டன. இவற்றில் 14,000க்கும் மேற்பட்ட பொருட்கள் உள்நாட்டில் தற்போது தயாரிக்கப்படுகின்றன. 5,500க்கும் மேற்பட்ட ராணுவத் தளவாடங்களை உள்நாட்டில் குறிப்பிட்ட கால வரம்புக்குள் தயாரிக்க பட்டியலிடப்பட்டது. இவற்றில் துப்பாக்கிகள், ரேடார்கள், இலகு ரக ஹெலிகாப்டர்கள் உட்பட 3,000க்கும் மேற்பட்ட பொருட்கள் உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன.



■ குண்டடம், உப்பாறு ஆலம்பாளையம் பெரியார் நகர் பகுதியில் கோழி பண்ணைகள் செயல்பட்டு வருவதால் குடியிருப்பு பகுதிகளில் துர்நாற்றம் வீசும் அவல நிலை. இதனால் நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளது என அப்பகுதி மக்கள் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜா அவர்களிடம் தமிழ் புலிகள் கட்சி சார்பில் ர. ரா. சந்தோஷ் ஒன்றிய செயலாளர் தலைமையில் புகார் மனு அளித்தனர். அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கடுமையான போராட்டங்களை எதிர்கொள்ள நேரிடும் எனவும் கூறியுள்ளனர்

# தாம்பரம் முடிச்சூர் பகுதியில் விடியல் தெற்கு லட்சுமி நகர் பொது நல சங்கம் சார்பில் நடைபெற்ற சுதந்திர தின விழா

முடிச்சூர், ஆக.19-

செங்கல்பட்டு மாவட்டம் முடிச்சூர் பகுதி தெற்கு லட்சுமி நகர் குடியிருப்பு பகுதியில், விடியல் தெற்கு லட்சுமி நகர் குடியிருப்போர் பொது நல சங்கம் துவக்கப்பட்டு சங்கத்தின் இரண்டாம் மற்றும் 79வது சுதந்திர தின விழா விடியல் தெற்கு லட்சுமி நகர் சங்கத்தின் சட்ட ஆலோசகர் சீனி வாசன் தலைமையில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக சிவா விஷ்ணு நகர் குடியிருப்போர் நல சங்கம் தலைவர் பா.தவமணி கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார் அதனைத் தொடர்ந்து மாலையில் நடைபெற்ற விடியல் தெற்கு லட்சுமி நகர் குடியிருப்போர் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு விழா சங்கத்தின் தலைவர் கற்பகம் சீனிவாசன் ஏற்பாட்டில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் பள்ளியில் பெற்ற அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் பரிசு பொருட்கள் இனிப்புகள் வழங்கினார்கள் இதில் சிறப்பு அழைப்பாளராக துணைத் தலைவர் முடிச்சூர் விநாயக மூர்த்தி, சிவா விஷ்ணு நகர் குடியிருப்போர் நல சங்கம் தலைவர் பா.தவமணி, மயிலாப்பூர் இசபெல்லா மருத்துவமனை டாக்டர் காந்தையா, உயர் கல்வித் துறை அமைச்சர் உதவியாளர் துரைராஜ், டி.வி.ஆர் வெங்கட்ராமன்,



பாஸ்கர், குமார், ரமேஷ், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் பரிசு பொருட்களை வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் துணைத் தலைவர் பிரியா, செயலாளர் முகமது அம்ரு, துணை செயலாளர் பானுமதி, பொருளாளர் திலகவதி, மகளிர் அணி தலைவர் தமிழ்ச்செல்வி பாலமுருகன், இளைஞர் அணி செயலாளர் கலைச்செல்வன், சங்கம் உறுப்பினர்கள் முகமது அபுபக்கர், முகமது அப்சர், புவனேஸ்வரி அம்மாள், சுமதி, வசந்தா, பாத்திமா, தீலீப், வள்ளி, 12வது வார்டு நிர்வாகிகள் மற்றும் தெற்கு லட்சுமி நகர் சங்கம் நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்

இறுதியில் மதர்ஷா பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு விடியல் தெற்கு லட்சுமி நகர் குடியிருப்போர் நல சங்கம் சார்பில் ஒரு மூட்டை அரிசி வழங்கப்பட்டது



# திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அடுத்துள்ள தளவாய் பட்டினத்தில் பாரம்பரிய விளையாட்டான கபடி போட்டி

திருப்பூர், ஆக.19-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அடுத்துள்ள தளவாய் பட்டினத்தில் பாரம்பரிய விளையாட்டான கபடி போட்டி வெகு விமர்சியாக நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாட்டில் தலைசிறந்த அணிகளும் விளையாட்டு வீரர்களும், அகில இந்திய நடுவர்களும் பங்கு பெற்று விளையாட்டுப் போட்டியை வழிநடத்தினர் . அரை இறுதி போட்டியில் ஜே கே அகாடமி மற்றும் ஃபைரைஸ்ட் தஞ்சாவூர் அணியும் , ஜெயசித்ரா திருப்பூர் மற்றும் ராம்நாடு அணியும் பங்குபெற்ற போட்டியில் ராம்நாடு அணியும் ஜே கே அகாடமியம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இறுதிப் போட்டியில் ராம்நாடு அணி 248 என்ற புள்ளைக்கணக்கில் ஜே கே அகாடமியை வென்று முதல் பரிசு ஒரு லட்ச ரூபாய் மற்றும் அதற்கு இணையான கோப்பையும் பெற்று முன்னேறியது.

முதல் பரிசு ராம்நாடு அணி இரண்டாம் பரிசு ஜே கே அகாடமி மூன்றாம் பரிசு தஞ்சாவூர் ப்ரைஸ்ட் நான்காம் பரிசு திருப்பூர் ஜெயசித்ரா மேலும் முதல் பரிசுக்கான காசோலையை மாநில விவசாய அணி சங்க நிர்வாகியான டாக்டர் ஜெய்லானி அவர்கள் வழங்கினார்.



■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் .ஆர்.அழகுமீனா, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.



■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள்.




# சுதந்திர தினத்தை முன்னிட்டு வேலூர் மாவட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியம், சேக்கனூர் ஊராட்சியில் நடைப்பெற்ற சிறப்பு கிராம சபா கூட்டம்

வேலூர், ஆக.19-

சுதந்திர தினத்தை முன்னிட்டு வேலூர் மாவட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியம், சேக்கனூர் ஊராட்சியில் நடைப்பெற்ற சிறப்பு கிராம சபா கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்பு லெட்சுமி, பள்ளமும் . கடந்த (15.08.2025) அன்று சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்த குமார், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் மு.பாபு, வேலூர் ஒன்றியக்குழுத் தலைவர் அமுதா ஞானசேகரன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமால், ஒன்றியக்குழுத்துணைத்தலைவர் மகேஸ்வரி காசி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் த.பாபு, ஊராட்சி மன்ற தலைவர் மாலதி சுரேஷ்பாபு, துணைத்தலைவர் டி.ரமேஷ் பாபு, அணைக்கட்டு வட்டாட்சியர் வேண்டா, வட்டார வளர்ச்சி அலுவலர் வின்சென்ட் ரமேஷ்பாபு.. வேலூர் மாவட்டம் ஊராட்சி ஒன்றியம் மேல்மொவூர் ஊராட்சி மன்ற தலைவர் சகுந்தலா கண்ணதாசன் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது செம்பேடு ஊராட்சி மன்ற கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் கே அன்பழகன் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது புத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் கவிதா சிவக்குமார் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது கருகாமுத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் கொடியேற்றி கிராம சபை கூட்டத்தை நடத்தினார் அது சமயம் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது அதை தொடர்ந்து சேண்பாக்கம் ஊராட்சி மன்றம் தலைவரும் கிராம சபை கூட்டத்தைக் கூட்டி கிராம மக்கள் அனைவரும் கொடியேற்றி கிராம சபை கூட்டத்தை நிறைவு செய்தனர்



# பள்ளி அளவில் கலைத் திருவிழா போட்டிகள்

காளையார்கோவில், ஆக.19-

2025 - 2026 ஆம் கல்வி ஆண்டில் கலைத் திருவிழா போட்டிகளை தமிழ்நாடு அரசு ஒன்று முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு அரசு பள்ளிகளுக்கு தனியாகவும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு தனியாகவும் நடத்தி கொடுத்திட கேட்டுக் கொண்டதற்கிணங்க பள்ளியளவில் அனைத்து போட்டிகளும் நடைபெற்று வருகிறது. சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பள்ளி அளவிலான கலை திருவிழா போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. போட்டிகளை பள்ளியின் தலைமை ஆசிரியை தெய்வானை தொடங்கி வைத்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். பள்ளியில் பயிலும் ஒவ்வொரு மாணவரும் ஒரு போட்டியிலாவது தன்னுடைய தனித் திறன்களை வெளிக்கொணரும் வகையில் பசுமையும் பாரம்பரியமும் என்பதன் மையக்கருத்தில் கிராமிய நடனம் மாறுவேட போட்டி ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் கதை கூறுதல் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி பேச்சுப்போட்டி களிமண் பொம்மைகள் சிற்பங்கள் மணற்சிற்பங்கள் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் ஒவ்வொரு போட்டிகளிலும் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். ஆசிரியர்கள் மீனாட்சி கீதா வாசுகி கமலம்பாய் கணினி பயிற்றுனர் வித்யா கஸ்தூரி ஆகியோர் சிறப்பாக மாணவர்களை தயார்செய்து வழி நடத்தினர். பள்ளியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் குறுவட்ட வட்டார மாவட்ட மாநில அளவில் கலந்து கொள்ள வாய்ப்பு வழங்கப்பட உள்ளது.

# அழகப்பா பல்கலைக்கழகத்தின் 36வது பட்டமளிப்பு விழா 314 மாணவ மாணவியருக்கு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பட்டங்களை வழங்கினார்




காரைக்குடி, ஆக.19-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக் கலையரங்கில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது

அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேரா. க. ரவி அனைவரையும் வரவேற்று பல்கலைக் கழகத்தின் சாதனைகள் குறித்து உரையாற்றினார்

தமிழக ஆளுநரும் அழகப்பா பல்கலைக்கழக வேந்தருமாகிய ஆர். என். ரவி பட்டமளிப்பு விழாவிற்கு தலைமை வகித்து மாணவ மாணவியருக்கு பட்டங்களை வழங்கினார்

பெங்களூரு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவரும் மற்றும் னராகக் கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்துகையில்,

சுதந்திரம் கிடைத்த காலத்தில் 97.5 சதவீத மக்கள் வறுமை கோட்டிற்குள் இருந்த நிலையில் இன்று இந்திய அனைத்து துறைகளிலும் அபார முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் ,பசுமை புரட்சியின் மூலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளது இந்தியா எனவும் கூறினார். சுகாதார துறையில் உலக தர மருத்துவமனைகளும் மருத்துவர்களும் உருவாகி சராசரி ஆயுட்காலம் 32 ஆண்டுகளில் இருந்து 72 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது எனவும்,கல்வியறிவில் 12 சதவீதத்தில் இருந்து 79.7 சதவீதமாக உயர்ந்துள்ளதையும் குறிப்பிட்டார்.

இந்தியா 1950 60 ஆண்டுகளில் மற்ற நாடுகளிடமிருந்து உணவுக்காக உதவி பெற்ற நிலையில் நேற்று உணவு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடாக உயர்ந்ததை பாராட்டினார் .

மின்சார வசதியை அனைத்து கிராமங்களுக்கும் சென்றடைந்ததையும் மின் உற்பத்தி திறன் 1362 மெகா வாட்டிலிருந்து பாட்டில் 403 ஜிகா வாட்டாக உயர்ந்ததையும் குறிப்பிட்டார்.

சுதந்திரம் பெற்ற போது ரூ 2.7 லட்சம் கோடி மட்டுமே இருந்த இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி இன்று ரூபாய் 135.13 லட்சம் கோடியாக உயர்ந்து உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாக உயர்ந்துள்ளது. எனவும் 2031 மூன்றாவது வளரும் திறன் நமக்கு உண்டு என்றும் குறிப்பிட்டார் .

இந்தியன் ரயில்வே உலகில் மிகப்பெரியது என்றும் சாலைகள் 16 மடங்கு உயர்ந்து உலகின் இரண்டாவது பெரிய சாலை வலை அமைப்பாக இந்தியா பெற்றுள்ளதாக தெரிவித்தார்

இப்பட்டமளிப்பு விழாவில், ஒருவருக்கு டி.எஸ்.சி (டாக்டரேட் ஆப் சயின்ஸ்) பட்டமும், 133 நபர்களுக்கு முனைவர் பி.எச்.டி பட்டமும் பெற்றனர். மேலும் பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளில் பயின்ற 2,035 மாணவர்களும், இணைப்புக் கல்லூரிகளில் பயின்ற 12,114 மாணவர்களும், தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக பயின்ற 23,158 மாணவர்களும், இணையவழி கல்வித்திட்டத்தின் வாயிலாக பயின்ற 553 மாணவர்களும், இணைவுக் கல்வித் திட்டத்தின் கீழ் பயின்ற 5,169 மாணவர்களும், சோத்து ஆக மொத்தம் 43,163 மாணவ, மாணவியர்களும் பட்டங்கள் பெறுகின்றனர்.

இதில் 314 மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை நேரிடையாக ஆளுநர் வழங்கினார் இவர்களில் டி.எஸ்.சி 1 மற்றும் பிஎச்டி 133, பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் ஆய்வியல் நிறைஞர் (எம். பில்) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 4 பேரும், முதுநிலை (பி.ஜி) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 48 பேரும், இளநிலை (யு.ஜி ) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 12 பேரும், பல்கலைக் கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளில் முதுநிலை (பி.ஜி) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 25 பேரும், இளநிலை (யு.ஜி) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 30 பேரும், பல்கலைக்கழக இணைவுக் கல்வித் திட்டத்தின் கீழ் முதுநிலை (பி.ஜி)பட்டத்தில் முதல் தரம் பெற்ற 20 பேரும், இளநிலை (யு.ஜி) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 41 பேரும் நேரில் பெற்றனர்..



# மதுரையில் செய்தித் துறை அமைச்சர் சாமிநாதன் பல்வேறு இடங்களில் ஆய்வு

மதுரை, ஆக.19-

அரசு முறை பயணமாக மதுரை வருகை தந்த தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் சாமிநாதன் பல்வேறு இடங்களில் ஆய்வுப் பணி மேற்கொண்டார்.

மதுரை மாவட்டம், ரேஸ்கோர்ஸ் சாலையில் உள்ள அரசு அச்சகத்தில் ஆய்வு நடத்திய அவர் மதுரை மாவட்டம் காந்தி நினைவு அருங்காட்சியகத்தை, ஆய்வு செய்து பார்வையிட்டார். தொடர்ந்து உலக தமிழ் சங்க கருத்தரங்க கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கினை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் கோ தளபதி புதூர் பூமிநாதன் தமிழ் வளர்ச்சி துறை செயலாளர் ராஜாராமன், உலகத் தமிழ் சங்க தனி அலுவலர் முனைவர் அவ்வை அருள், துணைத் தலைவர் பர்வீன் சுல்தானா, திமுக நிர்வாகிகள் அக்ரி கனேசன் புண்ணியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும்

## கலைஞரின் கனவு இல்லம் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, ஆக.19-

கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி முகமை சார்பில் திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞரின் கனவு இல்லம் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழருமீனா, நேரில் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு மநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் தேவைகளுக்காக பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் ஊரகப்பகுதியில் வசிக்கும் வீடு இல்லாத ஏழை, எளிய மக்கள் பாதுகாப்புடன் வசிக்க வேண்டும் எனவும். அனைவருக்குமே பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்காக கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை அறிவித்து, இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.3.10 இவட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலத்தில் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட ஆவம்பாரி மலைவாழ் பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தற்போது பூச்சு வேலைகள் நடைபெற்று வருகிறது. கட்டப்பட்டு வரும் வீட்டின் அடிப்படை வசதிகள், கட்டுமான பணிகளின் தரம் உள்ளிட்டவைகள் ஆய்வு மேற்கொண்டதோடு, கட்டுமான பணிகள் தொய்வின்றி நடைபெற பயனாளிக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பணிகளை தரமானதாகவம். உறுதித்தன்மையுடன் அமைத்திடுவதை துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர் அழகுமீனா. தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுதந்திர தின விழா சிறப்பு விருந்தினராக ஆதிலிங்க பெருமாள் பங்கேற்பு

கன்னியாகுமரி, ஆக.19-

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இந்திய திரு நாட்டின் 79 வது சுதந்திர தினம் பள்ளி தலைமை ஆசிரியர் சி.ராமச்சந்திரன் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கொடி கம்பத்தில் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தப் பட்டது, பின்னர் ஆசிரியர் கள் மற்றும் மாணவ மாணவிகள் உள்பட அனைவரும் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். இந்த நிகழ்வில் கன்னியாகுமரி மாவட்ட காங்கிரஸ் திட்டக் குழு உறுப்பினரும் அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி 13வது காங்கிரஸ் கவுன்சிலருமான குமரி தா.ஆதிலிங்க பெருமாள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ, மாணவிக ளுக்கு. இனிப்புகள் வழங்கியும், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பிடித்த மாணவ மாணவி களுக்கு, பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி பேசினார். நிகழ்வில் கல்வி மேலாண்மை குழு தலைவி சாந்தி ரமேஷ், உதவி தலைமை ஆசிரியர் க கிருஷ்ணன், ஆசிரியர் எஸ் என். குமார், அகஸ்தீஸ்வரம் முன்னாள் பேரூராட்சி தலைவர் சந்தையடி பாலகிருஷ்ணன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் சிவராம கிருஷ்ணன் பள்ளியின் மாண விகள், பெற்றோர்கள், கல்வி மேலாண்மை குழு உறுப்பி னர்கள், அனைவரும் கலந்து கொண்டனர்.




பெருங்களத்தூர் ஆர்.எம்.கே நகர் மற்றும் என்.ஜி.ஓ காலனி மக்களின்

## 50 ஆண்டு கால கனவு நிறைவேற்றி வீட்டுமனை பட்டா பெற்று தந்த தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர் ராஜாக்கு பாராட்டு விழா

பெருங்களத்தூர், ஆக.19-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெருங்களத்தூர், ஆர்எம்கே நகர் மற்றும் என்ஜிஓ காலனி பகுதிகளில் ஏராளமான பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் அங்கு வசித்து வரும் பொது மக்கள் கடந்த 50 ஆண்டு காலமாக வீட்டுமனை பட்டா வேண்டும் என தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக ஆட்சி பொறுப்பேற்றவுடன் சம்பந்தப்பட்ட பொதும க்களுக்கு வீட்டுமனை பட்டா பெற்றுத் தர தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை எடுத்து கடந்த ஜூன் மாதம் 19ம் தேதி தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கண்ட பகுதிகளை சேர்ந்த 231 பேருக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார். இதனை தொடர்ந்து இன்று மாலை புது பெருங்களத்தூர் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் வீட்டுமனை பட்டா வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் வீட்டுமனை பட்டா பெற்றுத்தர பல்வேறு முயற்சிகளை எடுத்துப் பெற்றுத் தந்த தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக பாராட்டு விழா நடைபெற்றது. இதில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா கலந்து கொண்டார். அவருக்கு ஆர்எம்கே நகர் மற்றும் என்ஜிஓ காலனி பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் சால்வை, மாலை அணிவித்து,கேடயம் வழங்கி நன்றி தெரிவித்து பாராட்டினர்.உடன் மண்டல குழு தலைவர் டி.காமராஜ், நியமனக் குழு உறுப்பினர் எஸ்.சேகர், மாமன்ற உறுப்பினர் மதுமிதா மதன், முன்னாள் கவுன்சிலர் ஜெபதுரை, திமுக நிர்வாகிகள் பன்னீர் செல்வம், குமாரசுவாமி, ஜேம்ஸ், தாமோதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவியிடம் வித்யா கிரி கல்வி குழும சி.ஏ.ஓ. ஐஸ்வர்யா சரண் சுந்தர் டாக்டர் பட்டம் மகிழ்ச்சியுடன் பெற்றார்

காரைக்குடி, ஆக.19-

அழகப்பா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில், மேனேஜ்மென்ட் பாடப்பிரிவில், மிகவும் பயனுள்ள ஆராய்ச்சி மேற்கொண்டு, வித்யா கிரி கல்வி குழும சி.ஏ.ஓ. ஐஸ்வர்யா சரண் சுந்தர் தமிழ்நாட்டின் ஆளுநர் மேதகு ஆர்.என். ரவி இகாப (ஒய்வு) அவர்களிடம் டாக்டர் பட்டம் பெற்றார்.

டாக்டர் பட்டம் பெற போகும் வித்யா கிரி கல்வி குழும சி.ஏ.ஒ. ஐஸ்வர்யா சரண் சுந்தர் அவர்கள் பிரபல கல்வியாளரும், அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பொறுப்பு குழுவில் இருந்து ஒன்றரை யாண்டு காலம் சிறப்பாக செயல்பட்டவரும், வித்யா கிரி கல்வி குழுமத்தின் தாளாளருமான முனைவர் ஆர். சுவாமிநாதன், மற்றும் வித்யா கிரி கல்வி குழுமத்தின் ஆற்றல் மிக்க முதல்வர் ஹேமமாலினி சுவாமிநாதன் இவர்களது மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

விழாவில் அழகப்பா பல்கலைல் 43,163 பேர் பட்டம் தகுதி பெற்றனர். விழாவில் 314 பேரு நேரிடையாக வழங்கப்பட்டது. மேடைக்கு வந்து ஆளுநர் கரங்களால் டாக்டர் பட்டம் பெற்ற ஐஸ்வர்யா சரண் சுந்தர், சீஎஸ்ஆர் நடைமுறைகள் ஏற்படுத்தும் விளைவுகள், நிறுவனங்கள் எதிர்கொள்ளும் உட்புற சவால்கள் மற்றும் வெளியுற சவால்கள் ஆகியவற்றை ஆராயும் வகையிலும்,

ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள், பரிந்துரைகள், எதிர்கால ஆராய்ச்சிக்கான திசைகள், மேலாண்மை தொடர்பான பயன்படுத்தும் சூழல்கள் மற்றும் ஆய்வின் முடிவுகளை வழங்குகிறது என்ற வகையில் இவரது ஆராய்ச்சி முக்கியத்துவம் பெறுகிறது. பட்டம் பெற்றவர்களில் D.Sc.-1, மற்றும் Ph.D.-133, மற்றும் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் ஆய்வியல் நிறைஞர் (M. Phil.) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 4 பேரும், முதுநிலை (P.G.) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 48 பேரும், இளநிலை (U.G.) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 12 பேரும். பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளில் முதுநிலை (P.G.) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 25 பேரும். இளநிலை (U.G.) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 30 பேரும், பல்கலைக்கழக இணைவுக் கல்வித் திட்டத்தின் கீழ் முதுநிலை (P.G.) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 20 பேரும், இளநிலை (U.G.) பட்டத்தில் முதல் தரம் பெற்ற 41 பேரும் நேரில் பட்டதாரிகள் உறுதிமொழி ஏற்றனர்.




## விசிக தலைவர் தொல் திருமாவளவன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு துப்புரவு பணியாளர்களுக்கு இலவச வேட்டி சேலை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது

தாம்பரம், ஆக.19-


செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு தாம்பரத்தில் விசிக தலைவர் தொல் திருமாவளவன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் சட்டமன்ற தொகுதி கிழக்கு தாம்பரம் 63வது வார்டு விசிக நிர்வாகி ஐ.பி.ஆர்.ராஜா மற்றும் ஜீவா ரத்தினம் ஆகியோர் தலைமையில் துப்புரவு பணியாளர்களுக்கு இலவச வேட்டி சேலை மற்றும் மதிய உணவு வழங்கும் விழா நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் சட்டமன்றத் தொகுதி தெற்கு மாவட்ட செயலாளர் பொறியாளர் சாமுவேல் எபினேசர், மாநிலத் துணைச் செயலாளர் சமூக ஊடகம் தாம்பரம் ஜெ.கதிரவன், தொகுதி பொறுப்பாளர் செல் சேகர், மாவட்ட துணை அமைப்பாளர் பொறியாளர் அணி ஜெயச்சந்திரன், செம்பாக்கம் பகுதி செயலாளர் தினேஷ் ஆகியோர் கலந்து கொண்டு துப்புரவு ஒரு பணியாளர்களுக்கு இலவச வேட்டி சேலை மற்றும் மதிய உணவு வழங்கினார்கள் இதில் ஏராளமானோர் விசிக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் துப்புரவு பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கீரணிப்பட்டியில் விஜயரகுநாத சேதுபதி மன்னர் கால செப்பேடு கண்டுபிடிப்பு

சிவகங்கை, ஆக.19-

சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூர் வட்டம், கீரணிப்பட்டியில் விஜயரகுநாத சேதுபதி மன்னர் கால செப்பேடு கண்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

கீரணிப்பட்டி ஸ்ரீ சூலாட்டுக்காளி கோவில் வீட்டுப் பங்காளிகள் வசம் ஒரு செப்பேடு உள்ளதாக வந்த தகவலையடுத்து காரைக்குடி, அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் வேலாயுதராஜா மற்றும் புதுக்கோட்டை தொல்லியல் கழகத் தலைவர் கரு.ராஜேந்திரன் ஆகியோர் ஆய்வு செய்தனர். அச்செப்பேட்டை ஆய்வு செய்த அவர்கள் தெரிவித்ததாவது,



இச்செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சாலிவாகன ஆண்டும் தமிழ் ஆண்டும் பொருந்தி வரவில்லை. ஆனால், தமிழ் ஆண்டின் அடிப்படையில் இச்செப்பேடு குறிப்பிடும் ஸ்ரீமுக ஆண்டு கிழவன் சேதுபதியின் காலமாக (கி.பி.1693) ஆக இருந்தாலும் இச்செப் பேட்டில் இடம்பெறும் விஜய ரகுநாத சேதுபதி (கி.பி.1713 1725) கிழவன் சேதுபதிக்கு அடுத்து ஆட்சிக்கு வந்தவர் என்பதால் அவரின் காலத்தைச் சேர்ந்ததாகவே கருத முடிகிறது. மேலும் விஜய ரகுநாத சேதுபதி மன்னர் அவரது ஆட்சிக்காலத்தில் புதிய கோட்டைகள் அமைத்துள்ளதாலும், இச்செப்பெட்டிலும் விஜயரகுநாத சேதுபதியின் காலத்தில் திருமயம் கோட்டைக்கு அடி மதில் போட்ட செய்தி குறிப்பிடப்படுவதாலும், இச்ச்செப்பேடு விஜயரகுநாத சேதுபதியின் (கி.பி.1713 1725) காலத்தைச் சேர்ந்தது என அறியமுடிகிறது.,கல்வாசல் நாட்டு குலசேகரபுரம் இளையாத்தங்குடிக்குத் கிழக்கே உள்ள பகுதியிலிருந்து வந்த கருமார் படை செட்டன் முத்தன், செட்டன் கருப்பன், செட்டன் பிச்சன் ஆகிய மூன்று வகைப் பிரிவினரும் குதிரை, ஆடு, மாடு வலசையோடு ஆமனிக்குளம் (ஆவினிப்பட்டி) வந்து தங்கியிருந்தனர். அவர்களைக் கண்ட ஏழு நகரத்தாரிடம், தஞ்சாவூர் பாளையப்பட்டு அரண்மனை சண்டையால் அங்கிருந்து புறப்பட்டு பிழைக்கப் போறோம் என்று கூறியபோது, ஏழு நகரத்தாரும் சேர்ந்து அதைத் தடுத்தனர். உங்களுக்கு வேண்டியதை நாங்கள் தருகிறோம், நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு அவர்கள் எங்களுக்கு காணியாச்சியாக (நிலக்காணி), தனி ஊரும், மண்ணும், மனையும் கொடுத்தால் இருப்போம் என்று கூறினார்கள்.

அப்படியே தருவதாகக் கூறிய ஏழு நகரமும், நன்மைக்கு ஒரு பணம், தீமைக்கு ஒரு பணம், மண்ணு, மனை காணியாச்சி பட்டையம் கொடுப்பதாக பேசி, திருமயம் கோட்டைக்கு அடிமதில் போடுகிறபோது விஜயரகுநாத சேதுபதியவர்களைச் சந்தித்து ஏழு நகரமும், மூன்று வகைப்பட்ட மன்னர் கருமார் படையும் போய்ச் சொன்னதாக கூறுகிறது. இதிலிருந்து விஜயரகுநாத சேதுபதி காலத்தில் திருமயம் கோட்டை கட்டப்பட்டது என்ற கருத்தை இச்செப்பேடு கூறுகிறது.. அதன்படி சேதுபதி மன்னரின் உத்தரவுப்படி ஏழு நகரத்தாரும் கூடி ஆவுடையார்கோவிலில் இருந்து கல்லு வெட்டி, இந்த பட்டையத்தின் மூலம் கருமார் படையான செட்டன் முத்தன், செட்டன் கருப்பன், செட்டன் பிச்சன் ஆகியோருக்கு காணியாச்சி கொடுத்ததைக் கூறுகிறது.

அதாவது குலசேகரபுரம், இளையாத்தங்குடி கீழத்தெரு புது ஊருக்கு எல்லையாவது கிழக்கெல்லை, புள்ளமங்கலத்து எல்லைக்கல்லுக்கு மேற்கு வடபுறக் கல்லு, செட்டி ஊரணிக்கு தெற்கு எல்லை, விராமதிக் கண்மாயில் எல்லைக் கல்லுக்கு வடக்கு மேற்கெல்லை, கோயில், குளம், நஞ்சை, புஞ்சை, அம்பலம், உம்பலம் ஆகியவை இச்செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

இதில் கல்வாயில் அல்லது கல்வாசல் நாடு என்பது இளையாத்தங்குடி, நெய்வாசல், பில்லமங்கலம், ஈழக்குடிப்பட்டி, ஆவினிப்பட்டி, இரணியூர், விராமதி, முத்தூர், செவ்வூர் முதலான ஊர்களைக் கொண்ட பகுதியாகும். இளையாத்தங்குடியின் முந்தைய பெயராக குலசேகரபுரம் இருந்துள்ளது என்பதை கல்வெட்டுக்களும், நகரத்தார் ஆவணங்களும் கூறுகின்றன.

இங்கு ஏழு நகரம் என்பது இளையாத்தங்குடி நகரத்தார், மாத்தூர் நகரத்தார், இலுப்பக்குடி நகரத்தார், சூரைக்குடி நகரத்தார், வேலங்குடி நகரத்தார், வைரவன்பட்டி நகரத்தார், நேமங்கோயில் நகரத்தார் பிரிவுகளைக் குறிக்கிறது.

## ஜெயபாரத் ஹோம்ஸ் நிறுவனத் தின் புதிய 'எலான்ஸா' அடுக்குமாடி குடியிருப்பு துவக்கவிழா



மதுரை, ஆக.19-

மதுரையில் கட்டுமான துறையில் 32 ஆண்டுகளாக மக்கள் மனதில் இடம் பதித்துள்ள இந்நிறுவனம், மதுரை, கோவையில் தனி வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டிவருகின்றது. மதுரை ஊமச்சிகுளத்தில் ஏற்கனவே ஆஸ்கார் சிட்டி' எனும் 200 தனி வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

அதன் உள்ளே 40 சென்ட் நிலப்பரப்பில் நவீன கட்டிடக்கலை நிபுணத்து வத்துவம் உடன் மிக பிரமாண்டமாக 'எலான்ஸா' அபார்ட் மென்ட் குடியிருப்பு அமைகிறது. இதன் துவக்க விழாவில் நிர்வாக இயக்குநர் ஜெயக் குமார், இயக்குநர் நிர்மலா தேவி, ஹன்சிகா குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர்.

ஜெயபாரத் ஹோம்ஸின் புதிய 'எலான்ஸா' குடியிருப்புகள் நவீன வசதியுடன் ஒரு படுக்கை யறை வீடு ஒன்று, 3 படுக்கையறை வீடு ஒன்று, 2 படுக்கையறை வீடுகள் 6 என தளத்திற்கு 8 வீடுகள் வீதம் 5 தளங்களில் 40 வீடுகள் அமைகின்றன. 717 சதுரடி முதல் 1,250 சதுரடி வரைவீடுகள் கட்டப்படவுள்ளன. தரை தளத்தில் மின்சார வாகனங்களுக்கு சார்ஜிங் வசதியுடன் பார்க்கிங், தோட்டம், மினி தியேட்டர், நடை பாதை, லிப்ட், சோலார் விளக்குகள், அனைத்து வீடுகளுக்கும் மும்முனை மின்சாரம் பேக்அப், சி.சி.டிவி உட்பட 30க்கும் மேற்பட்ட வசதிகளுடன் அமைகிறது. விலை ரூ.42 லட்சம் முதல் ரூ.65லட்சம் வரை உள்ளன.

புக்கிங் சலுகைகள் பற்றி நிர்வாக இயக்குநர் ஜெயக்குமார் கூறியதாவது: குறைந்த விலையில் அழகிய தரமான வீடுகள் வழங்கும் நோக்கில் இக் குடியிருப்பு கட்டப் படும். ஏற்கனவே கட்டி முடிக் கப்பட்டுள்ள கிளப் ஹவுசில் ஜிம், யோகா, தியானம் செய்ய தனி அறைகள், குழந்தைகளுக்கான விளையாட்டு அரங்கம், சங்க அலுவலகம் உள்ளன. வீடு புக் செய்வோருக்கு சதுர அடிக்கு ரூ.400 தள்ளுபடி உண்டு. துவக்கவிழாவில்15 வீடுகள் புக் ஆகியுள்ளன.மேலும் ஒரு வாரம் அல்லது 50 சதவீத வீடுகள் புக்கிங் வரை இச்சலுகை தொடரும். புக்கிங் செய்த 18 மாதங்களில் வீடு ஒப்படைக்கப்படும் வாடிக்கையாளர்களுக்கு மேலும் வங்கிகள் மூலம், 90சதவீதம் வரை கடன்வசதி பெற்று தரப்படும் என்றார். உடன் பொது மேலாளர் விக்னேஸ்வரி, முதன்மை பொறியாளர் ஜீவகன், உதவிப் பொது மேலாளர் சித்ரா பங்கேற்றனர்.




# கடையநல்லூரில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

கடையநல்லூர், ஆக.19-

தென்காசி மாவட்டம் சமீபகாலமாக தமிழகத்தில் அதிக அளவு மாணவர்கள், இளைஞர்கள், மத்தியில் அதிக அளவு போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி இளைய சமுதாயம் சீரழிவதை தடுக்கும் விதத்தில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பில் நான்கு மாத காலங்களாக முன்மாதிரி முஸ்லிம் இளைஞர்கள் என்ற பெயரில் சமூக தீமைகளை கண்டித்து துண்டு பிரச்சாரங்கள், தெருமுனை கூட்டங்கள், விழிப்புணர்வு பேரணிகள், நடைபெற்று வருகிறது அதில் ஒரு பகுதியாக அனைத்து கிளை சார்பில் மாபெரும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி கடையநல்லூரில் நடைபெற்றது பேரணிக்கு மாவட்ட தலைவர் அப்துல் சலாம் தலைமை தாங்கினார் மாவட்ட நிர்வாகிகள் செயலாளர் ஜலாலுதீன், பொருளாளர் சாதிக், துணைத் தலைவர் அப்துல் பாசித், துணைச் செயலாளர்கள் ஹாஜா மைதீன், அப்துல் பாசித் ,புளியங்குடி பிலால் மருத்துவனைச் அணி செயலாளர் அப்துல்லா குட்டி, ஆகியோர் முன்னிலை வகித்தனர் பேரணியை மாநிலச் செயலாளர் முகம்மது ஒலி தொடங்கி வைத்தார் பேரணியை பேட்டை காதர் மைதீன் ஜும்மா பள்ளிவாசலில் இருந்து ஊர்வலமாக தொடங்கியது அதனைத் தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் வழியாக சென்று இறுதியில் மணிக்கூண்டு அருகே நிறைவடைந்தது அங்கே கூடியிருந்த மக்கள் மத்தியில் மாநிலச் செயலாளர் முகம்மது ஒலி போதை விழிப்புணர்வு குறித்து சிறப்புரை யாற்றினார் இப்பேரணியில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர் இதற்கான ஏற்பாடை மாவட்ட தொண்டர் அணி செயலாளர் ஷேக் தாவூத் தலைமையில் கடையநல்லூர் அனைத்து கிளை நிர்வாகிகளும் செய்திருந்தனர் .நிகழ்ச்சியில் டவுன்கிளை தலைவர் இஸ்மாயில் , மதினா நகர் தலைவர் பாதுஷா, பேட்டை கிளை தலைவர் நல்லூர் சுலை மான், ரஹ்மானியாபுரம் கிளை தலைவர் பாரூக் ,மக்கா நகர் கிளை தலைவர் சேகனா, தவ்ஹீத் நகர் கிளை தலைவர் நிரஞ்சன் ஒளி, இ பி கிளை தலைவர் சதாம் உசேன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்..

# படூர் ஊராட்சியில் 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபைக்கூட்டத்தில் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு சமபந்தி விருந்து

திருப்போரூர், ஆக.19-

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட படூர் முதல் நிலை ஊராட்சியில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் ஆறு வழி சாலை அருகே அமைந்துள்ள படூர் முதல் நிலை ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் 79வது சுதந்திரதின விழா, சிறப்பு கிராம சபைக்கூட்டம், சமபந்திவிருந்து என முப்பெரும் விழா நடைபெற்றது.படூர் ஊராட்சி மன்ற வளாகம் எதிரே அமைக்கப்பட்டிருந்த தேசியக்கொடி கம்பத்தில் திமுக கட்சியின் திருப் போரூர் வடக்கு ஒன்றிய கழக மகளிர் அணி அமைப் பாளரும், ஊராட்சி மன்ற தலைவ ருமான, கே . எ. எஸ். தாராசுதாகர் துணைத் தலைவர் வார்டு உறுப்பி னர்கள் பொதுமக்கள் முன்னிலையில் 79வது சுதந்திர திருநாளை கொண்டாடும் வகையில் தேசியக் கொடி கம்பத்தில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து கொடி வணக்கம் செலுத்தினார்.

இதனைத்தொடர்ந்து அலங்கரித்து வைக்கப்ப ட்டிருந்த மகாத்மாகாந்தி அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை



செலுத்தினார்.

இவரைத்தொடர்ந்து துணைத்தலைவர் வார்டு உறுப்பினர்கள் பொது மக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இதனைத்தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணைக்கிணங்க ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் அமைக்கப் பட்டிருந்த திடலில் சுதந்திர தினத்தை யொட்டி சிறப்பு கிராம சபைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தலைவர், கே. எ. எஸ்.தாராசுதாகர் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட ஊராட்சி பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

2025 2026 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த வேண்டிய பொதுமக்க ளுக்கான திட்டங்கள் குறித்து பல்வேறு சிறப்பு வாய்ந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்பு வரவு செலவு கணக்கு மீது விவாதம் நடத்தப்பட்டது.

இதில் பொதுமக்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு ஊராட்சி மன்ற தலைவர் எளிய முறையில் சரியான தகவல்களுடன் விளக்கம் அளித்தார்.

பின்பு சிறப்பாக ஊராட்சியை நடத்தி வரும் தலைவர் கே.எ.எஸ். தாராசுதாகர் அவர்களுக்கு பொதுமக்கள் சால்வை அணிவித்தது வாழ்த்து தெரிவித்தனர்கள்.

இறுதியாக சுதந்திர தின விழாவையொட்டி ஊராட்சி மன்றம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமபந்தி விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் பொதுமக்கள் சுமார் 500க்கும் மேற்பட்ட வர்களுக்கு தலைவர், கே. ஏ .எஸ்.தாராசுதாகர் துணைத் தலைவர் வனிதா சேட்டு வார்டு உறுப்பினர்கள் இணைந்து சமபந்தி விருந்து பரிமாறினார்கள்.

இதில் குறிப்பிடத்தக் கவகையில் படூரின் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வரும் வேலாயுதம் என்கிற அதிகாரி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் சிறந்த பணியாளராக மாவட்ட ஆட்சியர் சினேகாவிடம் இருந்து விருது பெற்று இருந்தார். இவருக்கு ஊராட்சி மன்ற தலைவர், கே .ஏ .எஸ்.தாராசுதாகர் சால்வை அணிவித் துவாழ்த்து தெரிவித்தார் . இவரைத்தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் சினேகாவிடம் சிறந்த பணியாளர் விருது பெற்ற கேளம்பாக்கம் வருவாய் ஆயவாளர் மணிகண்டனுக்கு தலைவர் தாரா சுதாகர் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். நடைபெற்ற முப்பெரும் விழாவில் ஊராட்சி மன்ற துணைத்தலைவர், வனிதாசேட்டு (அசோக்) ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் முகமது கபீர் கான் உமாமகேஸ்வரி ரமேஷ், ரேகாசேகர், கௌதம் மோகன் மலர் செல்வம் ஜெயந்திதசரதன் சுரேஷ் திமுக கட்சியின் திருப்போரூர் வடக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளரும், படூர் மாற்றத்தை நோக்கி அறக்கட்டளையின் தலைவருமான படூர் கே. ஏ .எஸ்.சுதாகர் சரவணன், நவீன், கோகுல் ,சுதா, சுரேஷ் ,சுரேஷ் அனைத்து கட்சி யினர்கள் பொதுமக்கள் தூய்மை பணியாளர்கள் திருப்போரூர்வட்டார அரசு அலுவலர் என அனைவரும் கலந்து கொண்டனர்கள். வந்திருந்து கலந்து கொண்ட அனைவருக்கும் ஊராட்சி செயலர் டில்லிபாபு நன்றி தெரி வித்தார். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளும் ஊராட்சி மன்றம் சார்பில் தலைவர் , கே .ஏ.எஸ். தாராசுதாகர் அனைவரையும் ஒருங்கி ணைத்து செய்திருந்தார்.



# அணைக்கட்டு தாலுகா, வெட்டுவானம், எல்லையம்மன் திருக்கோவிலில், 79ம் சுதந்திர தினத்தை முன்னிட்டு சமபந்தி அன்னதான விழா

## மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பங்கேற்று பொதுமக்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்

வேலூர், ஆக.19-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, வெட்டுவானம், அருள்மிகு எல்லையம்மன் திருக்கோ யிலில் 79ம் சுதந்திர தினத்தை முன்னிட்டு, சமத்துவ, சமபந்தி அன்னதான விருந்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கலந்து கொண்டு அன்னதான கூடத்தில் சமபந்தியில் பொதுமக்களுடன் அமர்ந்து உணவருந்தினார். இந்நிகழ்வில் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், மாவட்ட

ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, வட்டாட்சியர் வேண்டா, அணை. ஒன்றிய குழு தலைவர் பாஸ்கரன், பள்ளிகொண்டா பேரூராட்சி மன்ற தலைவர் சுபபிரியா, அருள்மிகு எல்லையம்மன் கோயில் செயல் அலுவலர் நடராஜன் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



## வேலூரில், 79ம் சுதந்திரதின விழாவில் மாவட்ட ஆட்சியரின் ஓட்டுநர் (அலுவலக பைல் பணி) சரணுக்கு, மாவட்ட ஆட்சியர் சிறந்த பணியாளருக்கான சான்று வழங்கி பாராட்டு

வேலூர், ஆக.19-

வேலூர் மாவட்டம், வேலூர் நேதாஜி மைதானத்தில் (15.08.2025) நடைபெற்ற 79ம் சுதந்திரதின விழாவில் சிறப்பாக பணியாற்றிய அரசு பணியாளர், மாவட்ட ஆட்சியரின் ஓட்டுநர் (அலுவலக பைல் பணி) சரணுக்கு மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, வாழ்த்து தெரிவித்து, பாராட்டு சான்றிதழை வழங்கினார். இந்நிகழ்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆ.மயில்வாகனன், மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாவட்ட அளவிலான அனைத்து துறைகள் சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தேசபக்தி மிகு. முன்னாள் ராணுவ வீரர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். மக்கள் கருத்து நாளிதழ் சார்பாகவும், தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பாகவும், மாவட்ட அளவிலான அனைத்து செய்தியாளர்கள் சார்பாக மாவட்ட ஆட்சியரின் ஓட்டுநர் (அலுவலக பைல் பணி) சரணின் பணி சிறக்க, பதவி உயர்வு பெற்றிட, மென்மேலும் புகழ் வளர்ந்திட வாழ்த்துகள் என வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.




# காரைக்குடி தமிழ்நாடு யாதவ மகாசபை மாநகர நிர்வாகிகள் பதவியேற்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது

காரைக்குடி, ஆக.19-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தமிழ்நாடு யாதவ மகாசபை மாநகர நிர்வாகிகள் பதவி யேற்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது., இவ்விழாவில் தலைவராக K.பழனிக்குமார், S.வீரமணி செயலாளராக பதவி ஏற்று கொண்டனர். தமிழ்நாடு யாதவ மகா சபையின் சிவகங்கை மாவட்ட பண்பாட்டு கழக செயலாளர் நல்லாசிரியர் சுப.வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற விழாவில் யாதவ மகாசபை சிவகங்கை மாவட்ட தலைவர் சிவசக்தி பாண்டியன் முன்னிலையில் பதவியேற்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் மாநில இணைப் பொது செயலாளர் தேவ கோட்டை M. தனுஷ்கோடி , தமிழ்நாடு யாதவ மகாசபையின் சிவகங்கை மாவட்ட செயலாளர் ரெட் சங்கர், மாநில கொள்கை பரப்புச் செயலாளர் ARS. பாண்டியன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சுப்பிரமணியன், வட்டத் துணைச் செயலாளர் MJF லயன் பாப்பாத்தி M. கணேசன், காரைக்குடி மாமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், பாரத் பப்ளிக் பள்ளி தாளாளர் பொறியாளர் செல்லத்துரை ஆகியோர் சிறப்பு விருந் தினராக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். விழாவிற்கான ஏற்பாட்டினை தமிழ்நாடு யாதவ மகாசபை, சிவகங்கை மாவட்ட, காரைக்குடி மாநகர நிர்வாகம் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.



# சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கீழநெட்டூர் கிராமத்தில் கிராம சபை கூட்டம்

சிவகங்கை, ஆக.19-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கீழநெட்டூர் கிராம த்தில் கடந்த 15/08/2025 அன்று கிராம சபை கூட்டம் நடைபெற்றது இதில் பள்ளி மேலாண்மைக் குழு சார்பில் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு கோரிக்கை கடிதம் எழுதினார்கள் அதில் இளையான்குடி ஊராட்சி ஒன்றியம் கீழநெட்டூர் ஊராட்சி ஒன்றியம் நடுநிலைப் பள்ளியில் மாணவர்கள் 26, மாணவிகள் 30 மொத்தம் 56 குழந்தைகள் பள்ளி பயின்று வருகின்றனர். பள்ளியில் இரண்டு வகுப்பறை கட்டிடம் ஒன்றும் ஒரு வகுப்பறை கட்டிடம் ஒன்றும் மொத்தம் மூன்று வகுப்பறையில் எட்டு வகுப்புகள் நடைபெறுகின்றன இதில் ஒரு வகுப்பறையில் ஹைடெக் லேபில் உள்ளது மற்றொரு ஒப்பரையிலும் வராண்டாவிலும் மூன்று வகுப்பு மாணவர்களை வைத்து பாடம் நடத்திக் கொண்டிருக்கிறோம் கரும்பலகை வசதியும் கிடையாது எனவே அருகில் காலியாக உள்ள நூலக கட்டிடத்தை வகுப்பு நடத்துவதற்காக கொடுத்தால் மாணவர் களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என எனவே நூலக கட்டிடத்தை மாணவர்கள் கற்பித்தலுக்கு தந்து உதவுமாறு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் பள்ளிக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை செய்து தர வேண்டி கோரிக்கை எழுந்துள்ளது...



■ 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சிக்கு உட்பட்ட சாமநத்தம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர் அழகு பாண்டி, செந்தில்மணி, மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் லீலாதேவி, ஊராட்சி செயலர் கண்ணன், மற்றும் கிராம பொதுமக்கள் அனைவரது முன்னிலையில் ஆண்டு அறிக்கை, மேலும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



■ தென்காசி மாவட்டம் கடையநல்லூர் இரத்னா ஆங்கிலப்பள்ளியில் கிருஷ்ண ஜெயந்தி தினவிழா மிக சிறப்பாக நடைபெற்றது .இவ்விழாவில் குழந்தைகள் கிருஷ்ணன், இராதை மாறு வேடம் அணிந்து கிருஷ்ணரின் வரலாறு மற்றும் அவதார சிறப்புகளை பாடலாக பாடி, கோலாட்டம் அடித்து, ஆடி பாடி மகிழ்ந்தார்கள். விழாவிற்கான ஏற்பாட்டினை மிக சிறப்பாக செய்திருந்த தலைமை ஆசிரியர் மற்றும் அனைத்து ஆசிரிய ரு ஆசிரியைகளையும் பள்ளி நிர்வாகி இரத்னா பிரகாஷ் வாழ்த்தினார்.

# பொழிச்சலூர் ஊராட்சி த.வெ.க சார்பில் கிரிக்கெட் போட்டிக்கு கோப்பை வழங்கப்பட்டது

பொழிச்சலூர், ஆக்.19-

செங்கல்பட்டு மாவட்டம் பொழிச்சலூரில் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் தளபதி விஜய் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் அவர்கள் ஆணைக்கிணங்க செங்க ல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல் வீ.குமார் அவர்களின் அறிவுறுத்தின்படி 17/8/2025 அன்று பொழிச்சலூர் ஊராட்சி பகுதியில் அம்பேத்கர் கிரிக்கெட்லப் மற்றும் இளம் புயல் கிரிகெட் கிளப் கிரிக்கெட் விளையாட்டு போட்டி மிக சிறப்பாக நடைபெற்றது இந்த கிரிக்கெட் விளையாட்டு போட்டிக்கு பொழிச்சலூர் ஊராட்சி பகுதி தலைமை சுறா டி.ரவி அவர்களின் தலைமையில் பொழிச்சலூர் ஊராட்சி பகுதி தலைமை எஸ்.ஜான் அவர்களின் ஏற்பாட்டில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக பரிசு கோப்பைகள் மற்றும் பண முடிப்பு வழங்கப்பட்டது. முதல் பரிசு வெற்றி கோப்பை செங்கல்பட்டு வடக்கு



ஒன்றியம் தலைமை த.வெ.க ஜே.மணி ஜெய மோகன், இரண்டாம் பரிசு வெற்றி கோப்பை பொழிச்சலூர் ஊராட்சி பகுதி தலைமை த.வெ.க எஸ்.ஜான், மூன்றாம் பரிசு வெற்றி கோப்பை ஒன்றிய மாணவரணி தலைமை த.வெ.க டி.ஆர்.தினேஷ், நான்காம் வெற்றி கோப்பை த.வெ.க எஸ்.பார்த்திபன் ஒன்றிய இளைஞரணி தலைமை, மற்றும் நான்காம் பரிசுக்கான பணமுடிப்பு ரூபாய் 6000 அன்பளிப்பாக வழங்கியவர் த.வெ.க வி.வினோத்குமார் வடக்கு ஒன்றிய தலைமை. ஆகியோர் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது இதில் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் உட்பட கிரிக்கெட் வீரர்கள் வீராங் கனைகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161